//மிக மிக அவசரம் //தனிகவனம்//

வேலூர் மாவட்டக் கல்வி அலுவலரின்(இடைநிலை) செயல்முறைகள்

ந.க.எண் . 1953 /ஆ5/2025 நாள்.10, 07.2025.

| | |
|---|---|
| பொருள் | பள்ளிக் கல்வி – சர்வதேச கூட்டுறவு ஆண்டு 2025 அரசு உயர்/மேல்நிலை/ நடுநிலை பள்ளிகளிலுள்ள 6 முதல் 9-ம் வகுப்பு வரையிலான (அரசு பள்ளி) மாணவர்களிடம் கூட்டுறவு தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்துதல்- கூட்டுறவு இயக்கத்தில் பங்கேற்க செய்தல், போட்டிகள் பள்ளி அளவில் முதல் மூன்று இடங்கள் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு வட்டார அளவிலான போட்டிகள் ஜுன் 16.07.2025 அன்று நடைபெறுதல் நடுவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ள விவரங்கள் - தொடர்பாக. |
| பார்வை | 1. சென்னை-6, தமிழ் நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.32844/எம்1/இ1/2025, , நாள்.02.06.2025.<br>2. சென்னை-6, தமிழ் நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.00886 /எம்2 /இ3 /2025, நாள்.04.06.2025.<br>3. வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின்(பொ) செயல்முறைகள் நகஎண்.2636/ஆ5/2025, நாள். 16.06.2025 |

==============

பார்வை 2ல் காணும் கடிதத்தில், ஐக்கிய நாடுகள் சபையானது நடப்பு ஆண்டினை, “நல்லுலகைக் கட்டமைக்கும் கூட்டுறவு“ என்ற கருப்பொருளின் அடிப்படையில் சர்வதேச கூட்டுறவு ஆண்டாக அறிவித்துள்ளது என்றும் இதனை முன்னிட்டு 2025ஆண்டு முழுமைக்கும், தமிழ் நாட்டில் விளிம்பு நிலையில் உள்ள மக்களின் வாழ்வதாரம் மற்றும் பொருளாதாரத்தை கூட்டுறவு மூலம் மேம்படுத்த தமிழ் நாடு அரசின் கூட்டுறவுத் துறையின் பங்களிப்பை அனைவருக்கும் தெரிவிக்கும் வண்ணம் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை தெரிவிக்கப்படுகிறது.

மேலும் ஒரு பகுதியாக கூட்டுறவு இயக்கத்தில் இளைஞர்களை மாணவர் பருவத்திலிருற்தே ஈடுபடுத்தும் நோக்கத்தில் மாணவர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் 6ம் வகுப்பு முதல் 9ம் வகுப்பு வரையில் பயிலும் அரசு உயர்/ மேல்நிலை/நடுநிலை பள்ளி மாணவர்களுக்கு கீழ்கண்ட நிகழ்ச்சிகளை நடத்த தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. மரம் நடுவிழா
   அனைத்து அரசுப் பள்ளிகளிலும் மரம் நடுவதை விழாவாக நடத்தி, அதன் புகைப்படங்கள் (Geo Tagging) பதிவு செய்து மாணவர்களிடையே சுழலியல் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல், இதற்கென பார்வை 1ல் காணும் செயல்முறைகளில் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.
2. மாணவர்களிடையே எழுத்து மற்றும் பேச்சுப்போட்டிகள் நடத்துதல்

தமிழ் நாடு முழுவதும் உள்ள அரசு உயர்/மேல்நிலைப்பள்ளிகளில் உள்ள மாணவர்களிடையே கூட்டுறவு இயக்கம் குறித்த புரிதல் மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்த ஏதுவாக கீழ்கண்ட தலைப்பின் கீழ் போட்டிகளை நடத்தலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ.எ ண். | நிகழ்ச்சி | தலைப்பு |
|---|---|---|
| 1 | கூட்டுறவு தொடர்பான கதை சொல்லுதல் போட்டி | நான் பார்த்த கூட்டுறவு சங்கத்தின் கதை |
| 2 | பேச்சுப்போட்டி | சமூக பொருளாதார முன்னேற்றத்தில் கூட்டுறவின் பங்களிப்பு |
| 3 | கட்டுரைப்போட்டி | அனைவருக்கும் கூட்டுறவு அனைத்தும் கூட்டுறவு |

எனவே மேற்கண்ட போட்டிகளை வேலூர் மாவட்டத்தில் உள்ள அரசு உயர்/மேல்நிலைப்பள்ளிகளில் 2025 ஜூன் 27க்குள் பள்ளி அளவில் நடத்தப்பட்டது

அதனை தொடர்ந்து பள்ளி அளவில் முதல் மூன்று இடங்கள் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு வட்டார அளவிலான போட்டிகள் 16.07.2025(புதன் கிழமை) காலை 10.00 மணியளவில் கீழ்க்காணும் ஒன்றியங்களுக்கு நேராக பள்ளிகளில் நடைபெற உள்ளது. நடுவர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ள ஆசிரியர்களை மேற்காண் போட்டிக்கு விடுவித்து அனுப்புமாறு சார்ந்த பள்ளி தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

வட்டார அளவில் வெற்றிபெறும் மாணவர்கள் மாவட்ட அளவிலும் மாவட்ட அளவில் வெற்றிபெறும் மாணவர்கள் மாநில அளவிலும் வெற்றிபெறும் மாணவர்களுக்கு கூட்டுறவு வாரா விழவின்போது பின்வருமாறு பரிசுகள் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

| **நிலை** | **முதல் பரிசு** | **இரண்டாம் பரிசு** | **மூன்றாம் பரிசு** | **நடத்தப்படும் மாதம்** |
|---|---|---|---|---|
| வட்டார அளவில் | ரூ.5000/- | ரூ.3000/- | ரூ.2000/- | ஜூலை-2025 |
| மாவட்டஅள வில் | ரூ.10000/- | ரூ.6000/- | ரூ.4000/- | ஆகஸ்டு-202 5 |
| மாநில அளவில் | ரூ.20000/- | ரூ.12000/- | ரூ.8000/- | அக்டோபர்-20 25 |

3. கூட்டுறவு கல்விச் சுற்றுலா

   மாணவர்கள் தங்களது பள்ளிக்கு அல்லது இருப்பிடத்திற்கு அருகாமையில் உள்ள கூட்டுறவு சங்கங்களுக்கு நேரில் சென்று பார்வையிட்டு கூட்டு சங்க பணிகள் குறித்த பரிந்துணர்வை ஏற்படுத்துதல் இதன் மூலம் மாணவர்கள் வருங்காலத்தில் கூட்டுறவு இயக்கத்தில் ஆர்வத்துடன் ஈடுபட்டு சிறந்த கூட்டுறவாளர்களாகவும் கூட்டுறவு சங்கங்களின் தலைவர்களாகவும் உருவாகி கூட்டுறவு மூலமாக சிறந்த சமுதாயம் உருவாவதற்கு உறுதுணையாக அமையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

.

இணைப்பு- 1. போட்டிகளின் விவரம்
2. ஒன்றியம் வாரியாக போட்டி நடைபெறும் மையங்கள்
3. நடுவர்கள் விவரம்.

மாவட்டக் கல்வி
அலுவலர்(பொ)
(இடைநிலை)
வேலூர்

பெறுநர்
சார்ந்த ஆசிரியர்கள்
அனைத்து உயர்/மேல்நிலைப் பள்ளிகள்
வேலூர் மாவட்டம்.

நகல்-
1.வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்(பொ) அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.
2. வேலூர் மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலருக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.
3. வட்டார வளமைய ஆசிரியர் பயிற்றுநர்கள் தேகவலுக்காக அனுப்பப்படுகிறது